## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 28.12.2023ஆம் நாளன்று நடைபெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நகல்

**பொருள் எண்.01**

அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.23.11.2023ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7145/2023/எம்ஏ2 நாள்.15.12.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.236/2023/பி1 நாள்.18.12.2023ன் படியும் நகர்ப்புற உள்ளாட்சியினை ஒட்டி அமைந்துள்ள ஊராட்சியின் வருவாய் மற்றும் மக்கள்தொகை வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அருகில் உள்ள நகராட்சியுடன் இணைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு அருகில் உள்ள நல்லூர் ஊராட்சி, நொச்சிக்குட்டை ஊராட்சி மற்றும் மாதம்பாளையம் ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிகளை புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியுடன் தங்களின் ஊராட்சிகளை இணைக்க விருப்பம் இருப்பின் மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பவும் அவ்வாறு விருப்பம் இல்லை எனில் அதற்கான விருப்பமின்மை கடிதத்தை வழங்குமாறும் இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக மேற்கண்ட மூன்று ஊராட்சி தலைவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட மூன்று ஊராட்சி தலைவர்களும் அவர்களது ஊராட்சியை இந்நகராட்சியுடன் இணைக்க விருப்பம் இல்லை என விருப்பமின்மை கடிதம் வழங்கியுள்ளனர். எனவே மேற்கண்ட மூன்று ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைப்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1588/2023/எப்1)

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் முடிவு செய்யலாம்

**தீர்மான எண் : 189**

**தீர்மானம்** : நொச்சிக்குட்டை ஊராட்சி, நல்லூர் ஊராட்சி மற்றும் மாதம்பாளையம் ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிகளும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியுடன் இணைக்க ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்)திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

//உண்மைநகல் உத்தரவுப்படி//

29/1/24

ஆணையாளர்(மு.கூ.பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

29/1/24

Scanned with OKEN Scanner